අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/17/03/44 — ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. — දිනය / திகதி / Date 2020.05. 18

**சுற்றிக்கைஎண் 08/2020**

சகலமாகாணத் தலைமைச் செயலாளர்கள்,
சகலமாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகலமாகாணககல்விப் பணிப்பாளர்கள்,
சகலவலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகலகோட்டங்களுக்கும் பொறுப்பானபி..க.ப./உ...க.ப.
சகலஅதிபர்கள்,

**<u>அகில இலங்கைபாடசாலைரோபோதொழில்நுட்பம் மற்றும் புதியஆக்கபோட்டித் தொடர்</u>**

தொழில்நுட்பம் வேகமாக வளர்ச்சியடையும் நிலையில், உலகம் ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புதியகண்டுபிடிப்புகளை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கிறது என்பது அறியப்பட்ட உண்மையாகும். இந்ததுறை சார்ந்த அறிவு, அணுகுமுறை, திறன் மற்றும் நடைமுறை நுட்பங்களை பயின்று எதிர்கால வேலை உலகத்தின் சவால்களை சந்திப்பதற்காக மாணவ சிறார்களை ஆயத்தப்படுத்துவதற்கும், அவர்களுடைய புதிய படைப்புக்களை மேம்படுத்துவதற்கும், கல்வி அமைச்சு அகில இலங்கை பாடசாலை ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புதிய ஆக்க போட்டியை வருடாந்தம் நடாத்துவதற்கு ஒழுங்குசெய்துள்ளது.

இந்த சுற்றறிக்கையானது 2019.05.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் **28/2019** சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளுக்கு அப்பால் செயற்படும்.

**01. குறிக்கோள்கள் :-**

1. புாடசாலை மாணவர்களின் மறைந்துள்ள திறமையை வெளிக்கொணர்தல் ஊக்குவித்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல்
2. எதிர்கால வேலை உலகத்தின் திசைமுகப்படுத்தல் தொடர்பான புரிந்துணர்வை இற்றைப்படுத்தல், புதுவிதமாக சிந்திப்பதற்கு பிள்ளைகளை முன்னிலைப்படுத்தல் மற்றும் அதன் மூலமாக சிந்திப்பதற்கு பிள்ளைகளை ஊக்குவித்து புதிய படைப்புகளுக்கான இயலுமையை அதிகரித்தல்
3. உலகத்தில் மிக வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பப் போக்குகளுக்கு இலங்கை கல்வி அணுகுமுறையை உறுதிசெய்தல்
4. ரோபோ தொழில்நுட்பக் கல்வியை அரசாங்க தலையீட்டுடன் வலுவூட்டி பாடசாலை பிள்ளைகளின் இயலுமையை நாடு முழுவதும் பரப்புதல்
5. எதிர்கால வேலை உலகத்துடன் தோள் கொடுத்து நிற்கக்கூடியவாறு தொழிற் சந்தைக்குத் தேவையான ரோபோடிக்ஸ் திறன்களை மாணவர்களுக்கிடையில் வளர்ப்பதின் மூலமாக தன்னியக்கவாக்கம் தொடர்பான தொழில் முனைவோர் கருத்துக்களை தாபித்தல்

வருடாந்தம் நடாத்தப்படும் பாடசாலைப் போட்டிகளில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும்

www.vnzone.lk

**02. போட்டிகள் தொடர்பாகததமுவப்படும் விடயப்பரப்பு :-**

இந்தபோட்டி இரண்டுதலைப்புகளுடன் நடாத்தப்படும்

I. **தலைப்பு 1 - ரோபோதொழில்நுட்பம்தொடர்பானபோட்டித்தொடர்**

II. **தலைப்பு 2 புதியபடைப்புகளுக்கானபோட்டித்தொடர்**

போட்டித் தொடர் குறித்து இந்த இரண்டுதலைபுகளின் கீழ் தலைப்பு இலக்கங்களில் காட்டப்பட்டுள்ளபடி தொழில்நுட்ப பாவனை ஒவ்வொரு துறைக்ளுக்கு அமைவாக படைப்புக்களை முன்வைக்கலாம். ஒரு படைப்பானது ஒருதலைப்பின் கீழ் மாத்திரம் தேசிய போட்டிக்கு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

| தலைப்புஎண் | துறை |
|---|---|
| **01.** | உற்பத்தித் தொழில் மற்றும் சுற்றுச்சூழல் கல்வித் துறை<br>➢ விசாய, மீன்பிடி, ஏனைய உற்பத்திகள் மற்றும் சுற்றுச் சூழல் செயற்பாட்டுத் துறையின் கருமங்களை எளிதாக்கக்கூடிய அல்லது தன்னியக்க முறையை அடிப்படையாகக் கொண்ட ரோபோ மற்றும் ஏனைய படைப்புகள் |
| **02.** | கல்வித்துறை<br>➢ கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் பண்புத்தரத்தினை அதிகரித்துக்கொள்ளும் ரோபோ படைப்பு அல்லது ஏனைய படைப்புகள்<br>➢ கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை இலகுவாக்குவதற்காக பயன்படுத்தக்கூடிய ரோபோ அல்லது ஏனைய படைப்புகள் |
| **03.** | பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் துறை<br>➢ செயற்பாட்டு தன்னியக்கத்திற்கான ரோபோஅல்லது ஏனைய படைப்புகள்<br>➢ உற்பத்தி தொழில்நுட்ப செலவினங்களை குறைத்துக்கொள்ளும் அல்லது ஏனைய படைப்புகள் |
| **04.** | பொழுதுபோக்குத் துறை<br>➢ பொழுதுபோக்கு / விளையாட்டு செயற்பாடுகளுக்காக உபயோகப்படுத்தக் கூடிய சோபோ இயந்திரம் மற்றும் ஏனைய படைப்புகள் |
| **05.** | சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் துறை<br>➢ சுகாதார காப்புறுதி அல்லது மருத்துவ செயற்பாடுகள் தொடர்பாக பயனபடுத்தக்கூடிய ரோபோ படைப்புகள் அல்லது ஏனைய படைப்புகள். |

www.vnzone.lk

**03. போட்டிமட்டம்**

I. இலங்கையின் 9 மாகாணங்களும் தழுவும்படி தேசிய மற்றும் மாகாண சபை பாடசாலைகளில் தரம் 6 முதல் 13 வரை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் 18 வயதுக்கும் குறைந்த மாணவர்கள் இதில் பங்கேற்கலாம்

II. சுகல பாடசாலைகள் (அரச, உதவிபெறும் பாடசாலைகள்) மற்றும் பிரிவெனா மாணவர்களுக்கு இந்த போட்டியில் பங்கேற்க முடியும் என்பதோடு மேற்குறிப்பிட்ட முறைமைக்கமைவாக உருவாக்கப்பட்ட புதிய படைப்புகள் / பிரயோகங்கள் தமது பாடசாலை அதிபரின் / பிரிவெனாதிபதியின் பரிந்துரையுடன் போட்டிக்காக முன்வைக்கப்படும்.

III. இந்த போட்டிக்காக முன்வைக்கப்படும் சகல படைப்புகளும் ஒரு மாணவரால் செய்யப்பட வேண்டியதோடு குழுக்களாக பங்கேற்க முடியாது.

IV. மாகாண மட்டத்தில் மேற்குறிப்பிட்ட தலைப்புகளின் ஊடாக துறைகளின் படி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெறும் படைப்புகள் இறுதி போட்டிக்கு சமமாக நடாத்தப்படும் கணக்காட்சிக்காக முன்னிலைப்படுத்தப்படும்

V. மாகாணப் போட்டியும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் ஒவ்வொரு துறைக்கும ஏற்றவாறு நடாத்தப்படல் வேண்டும்.

VI. மாகாண போட்டிகளில் வெற்றிபெறும் படைப்புகள் ஒவ்வொரு தலைப்பின் ஊடாக ஒவவொரு துறைக்குரியவாறு இறுதி போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதோடு வெற்றியாளர்களுக்கு கல்வி அமைச்சினால் சான்றிதழ்கள், வெற்றி சின்னங்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்படுவதோடு உரித்தாகும் பணத்தொகை பின்வருமாறு அமையும்.
(ரோபோ தொழில்நுட்ப போட்டித்தொடர் மற்றும் புதிய படைப்புகளுக்கான போட்டித்தொடரின் கீழ் ஒவ்வொரு துறை தொடர்பாக பின்வருமாறு பணப்பரிசுகள் வழங்கப்படும்)

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | ரூ. 25,000.00 | - 01 |
| இர்ண்டாம் இடம் | ரூ. 15,000.00 | - 01 |
| மூன்றாம் இடம் | ரூ. 10,000.00 | - 01 |
| திறன் | ரூ. 5,000.00 | - 04 ஆம் இடத்திலிருந்து 10 ஆம் இடம் வரையில் |

VII. ஒவ்வொரு துறையிலும் முதலிடத்தைப் பெறும் பாடசாலைகளுக்கு அந்த பாடசாலையில் தொழில்நுட்ப கல்வியின் ஊக்குவிப்பிற்காக ரூ.25,000.00 நிதியுதவி வழங்கப்படும்.

**04. கால சட்டகம் :-**

| | | |
|---|---|---|
| பாடசாலைமட்டப்போட்டிகள் | - | ஜுன் 30 க்கு முன் |
| மாகாணப்போட்டி | - | ஜுலை 31 க்கு முன் |
| தேசியப்போட்டி | - | செப்டெம்பர் 30 க்கு முன் |

www.vnzone.lk

**05. ஒழுங்கமைப்பு மற்றும் தேர்வு நடவடிக்கைகள் :-**

மாகாணப் போட்டி
மாகாண மட்டத்திலான போட்டி மாகாணத்தில் தொழில்நுட்ப பாடங்களை ஒருங்கிணைப்பு செய்யும் பிரதி கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளரினால் ஒழுங்குசெய்யப்படல் வேண்டும். மாகாணத்தினால் ஒழுங்குசெய்யப்படும் போட்டித்தொடரின் தேர்வுக் குழு அமைப்பு பின்வருமாறு அமைய வேண்டும்.

- பல்கலைக்கழகமொன்றின் ரோபோ தொழில்நுட்பம் / மின்னனு மற்றும் மின் பொறியியல்/ மின்னனு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் / எந்திரவியல் பொறியியல் / செயற்கை நுண்ணறிவு அல்லது தொடர்புடையதுறையில் போதியளவுஅறிவுகொண்டவிரிவுரையாளர் அல்லது இந்ததுறையில் ஒருபட்டயபொறியியல்லாளர்.
- கல்விஅமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையினால் பெயரிட்டஅலுவலர் ஒருவர்
- மாகாணத்தில் தொழில்நுட்ப பாடம் / பொறியியல் தொழில்நுட்பப் பாடத்திற்கு பொறுப்பானபிரதி கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்
- வேறு மாகாணம் ஒன்றை பிரதிநிதித்துவப் படுத்தும் துறை தொடர்பான புரிந்துணர்வுடன் கூடிய ஒரு ஆசிரியர்
- மாகாண மட்டத்திலான போட்டியின் இறுதி முடிவாளராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செயல்புரிவார்.

**06. தேசிய போட்டி**

கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையினால் தேசிய போட்டி ஒழுங்கு செய்யப்படும்.
தேசிய போட்டியின் தேர்வுக்குழு பின்வருமாறு அமைதல் வேண்டும்.

- பல்கலைக்கழகமொன்றின் ரோபோ தொழில்நுட்பம் / மின்னனு மற்றும் மின் பொறியியல் / மின்னனு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் / எந்திரவியல் பொறியியல் / செயற்கை நுண்ணறிவு அல்லது தொடர்புடைய துறையில் போதியளவு அறிவு கொண்ட இரண்டுவிரிவுரையாளரகள் அல்லது இந்த துறையில் இரண்டு பட்டய பொறியியலாளரகள்
- கல்வி அமைச்சின் தொழில்நுட்ப கல்விப் பணிப்பாளர் மற்றும் அவரால் பெயரிடப்படும் இரண்டு அலுவலர்கள்.

**07. தீர்வுக் குழு :-**

கல்வி அமைச்சுச் செயலாளரினால் பெயரிடப்படும் மூன்று பிரதிநிதிகள் தீர்வுக்குழுவினர்களாக செயல்புரிவதோடு இந்த போட்டித் தேர்வு நடவடிக்கைகள் தொடர்பாக இறுதி முடிவு தீர்வுக் குழுவை சாரந்ததாகும்.

இந்த சுற்றறிக்கையின் விதிமுறைகளை அமுல்படுத்தும்போது தோன்றும் எந்தவொரு சிக்கல் தொடர்பான இறுதி முடிவு கல்விச் செயலாளரை சாரந்ததோடு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளுக்கிடையில் ஒப்பீடு இன்மைகள் காணப்படும் சந்தரப்பத்தில் சிங்கள பதிப்பு சரியானதென கருதவேண்டும்.

இந்த ஆலோசனைகளின் படி உங்கள் கல்லூரியில், மாகாணத்தில் மாணவ சிறார்கள் மத்தியில் ரோபோ தொழில்நுட்பத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என எண்ணுகிறேன். இலங்கை மாணவர் தலைமுறையின் எதிர்கால சுபீட்சத்திற்காக மேற்கொள்ளப்படும் இந்த பணி தொடர்பில் நீங்கள் வழங்கும் தொடர்ச்சியான பங்களிப்பை பெரிதும் பாராட்டுகின்றேன்.

என்.எச்.எம். சித்ரானந்த
செயலாளர்
கல்வி அமைச்சு

www.vnzone.lk